ஓம் சரவணஜோதியே நமோ நம

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1479

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**17.10.2023**, செவ்வாய்கிழமை

1. ஓங்கார ஞான சொரூபமே
ஓங்காரக்குடில் படைத்து அருளுகின்ற
ஓங்காரன் என் அவதார அரங்கனே
ஓதிடுவேன் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 30 ம் நாள், 17.10.2023, செவ்வாய்கிழமை)
உலகத்தில் அரங்கன் சக்தி பெருக
தானதர்மத்தின் பலமும் கூடிட
தக்கபடி சுப்ரமணியர் யானும் அரங்கனுக்கு அருளுவேன்
3. அருளவே அரங்கன் பலத்தால் அகிலத்துக்கு நன்மை உண்டுஉண்டு
ஆற்றல்பட அரங்கன் உபதேசத்தால்
அகிலத்தார்களுக்கு ஞானிகளாகும் வாய்ப்பு உண்டுஉண்டு
ஆற்றல் பட அரங்கனைத் தொடர்ந்துவர
4. வருகின்ற மக்கள் யாவர்க்கும்
வையகத்தில் இனி பிறவாத பெரும்பேறு
தருகின்ற வரமும் சக்தியும்
தக்கபடி அரங்கன் கரங்களுக்கு இருப்பதாலே
5. ஆதலால் உலகோர் அரங்கன் தொடர்பு கூட்டி
அவசியம் ஓங்காரக்குடில் சேவைகளில் கலந்து
கலந்துமே தர்மஞானம் பெருக்கி
கலந்துமே அரங்கன் கொள்கைகளை உலகோர்க்கு
6. யாவரும் பின்பற்றும் வண்ணம் கொண்டு செல்ல
கலியுகத்தில் மாற்றம் அரங்கன் மார்க்கம் வழி நடந்தேறும்
கட்டாயம் அரங்கன் சொல் செயல்கள் அத்தனையும்
கலியுகத்தில் வேதஞானமாகப் பரவி

7. பரவியே உலகோர்க்கு ஞானசித்தி
பழுதின்றி இனிப்பிறவாத வண்ணம்
துணிவுபட அற்புதத்தை நடத்தும்
தொடர்ந்து உலகமாற்றமும் நிகழ்த்தும்

8. ஆகவே உலகோர் அரங்கன் கரம்பற்றி வர
ஆற்றல்பட அரங்கன் தீட்சை பெற்றும் வர
வகையான அரங்கன் தர்மத்தை ஏற்று வர
வையகத்தில் மாற்றம் சடுதி காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–